**Copy of Deposition**

**சார்பு நீதிமன்றம், கொடுமுடி, ஈரோடு மாவட்டம்**

**H.M.OP. 04/2024 மற்றும் H.M.OP.03/2024**

பெயர்:–ரேணுகா நாள்: 19.08.2025

**எ.ம.சா.1 ஆஜர். சத்திய பிரமாணத்தின்பேரில் விசாரணை செய்யப்பட்டார்.**

**எ.ம.சா.1 மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை :–**

நானும் மனுதாரரும் உறவினர்கள் என்றால் சரிதான். நானும், மனுதாரரும் விருப்பப்பட்டு பெற்றோர்கள் சம்மதத்துடன்தான் திருமணம் செய்து கொண்டோம்என்றால் சரிதான். திருமணத்திற்கு 4 மாதத்திற்கு முன்பு எங்கள் குல வழக்கப்படி அவரது பெற்றோர்கள் மற்றும் அவரது உறவினர்கள் எங்கள் வீட்டிற்கு உறுதி வார்த்தை பேச வந்தார்களா என்றால் எனது பெரியப்பா வீட்டிற்கு வந்தார்கள் நான் அங்கில்லை. மனுதாரரின் பெற்றோர் மற்றும்அவரது உறவினர்கள் பெரியப்பா வீட்டில் சாப்பிட்டுவிட்டு சென்றார்கள் என்றால் அதைபற்றி எனக்கு தெரியாது. பொதுவாக உறுதி வார்த்தை பேச வந்தால் சாப்பிட்டுவிட்டு செல்வார்கள் என்றால் தெரியாது. அவ்வாறு உறுதி வார்த்தை பேச வரும்போது எனது பெற்றோர், எனது மாமா அனைவரும் வந்தார்கள் என்றால் எங்களது காதல் திருமணம் என்பதால் அங்கு என்ன நடந்தது என்று எனது பெற்றோர்கள் என்னிடம் சொல்லவில்லை. தற்போதாவது கேட்டு தெரிந்து கொண்டேனா என்றால் அதன்பிறகு சுமூகமாக போனதால் அதைப்பற்றி கேட்டு தெரிந்து கொள்ளவில்லை. உறுதி வார்த்தை பேசிய பிறகு எனது பெற்றோர், மாமா, உறவினர்கள் எல்லாம் மனுதாரர் வீட்டிற்கு சென்று பேச்சு வார்த்தை செய்தார்களா என்றால் எனக்கு நிச்சயதார்த்தம் நடந்ததுதான் தெரியும், அதற்கு முன்பு என்ன நடந்தது என்று எனக்கு தெரியாது. எனது திருமணத்தின்போது எனக்கு வயது 22. நிச்சயதார்த்ததிற்கு முன்பு மனுதாரரின் பெற்றோர் மற்றும் உறவினர்கள் எங்கள் வீட்டிற்கு வந்தும், பின்னர் எனது பெற்றோர் மற்றும் உறவினர் மனுதாரர் வீட்டிற்கு சென்றும், சுமூகமாக பேசிவிட்டு சாப்பிட்டுவிட்டுதான் சென்றார்கள் என்றால் இல்லை. உறுதி வார்த்தை பேசும்வரை எங்கள் குடும்பத்திற்குள் எந்த பிரச்சனையும் இல்லையா என்றால் இல்லை. உறுதி வார்த்தை பேசிய பிறகு கொளாநல்லியில் உள்ள திருமண மண்டபத்தில் எனக்கும் மனுதாரருக்கும் திருமண நிச்சயதார்த்தம் நடந்தது என்றால் அதுதான் உறுதி வார்த்தை. நிச்சயதார்த்திற்கு பிறகு இருவீட்டாரும் ஒன்றாக சேர்ந்து மாங்கல்யம் எடுப்பது, துணிமணிகள் மற்றும் பாத்திரங்கள் எடுப்பது என்று சுமூகமாகத்தான் இருந்தோம் என்றால் சரிதான். திருமணத்தின்போதும் மனுதாரர் வீட்டிற்கும், எங்கள் வீட்டிற்கும் எவ்வித பிரச்சனையும் இல்லை என்றால் ஆமாம்.



P SRIDEVI
Digitally signed by P SRIDEVI
Date: 2025.08.19 17:52:23 +0200

## Copy of Deposition

எனது பிரமாண வாக்குமூலத்தில் நானும், மனுதாரரும் சில காலம் பிரச்சனை இல்லாமல் வாழ்ந்தோம் என்று குறிப்பிட்டுள்ளேன், எவ்வளவு காலம் என்றால் சுமார் 5 வருடங்கள். நான் எனது 17வது வயதில் +2 படித்து ஒரு பாடத்தில் தேர்ச்சி பெறவில்லை என்றால் ஆமாம். அதன் பிறகு நான் படிப்பை தொடரவில்லை என்றால் சரிதான். திருமணத்திற்கு பின்புதான் தேர்ச்சி பெறாத பாடத்தில் நான் தேர்வு எழுதி தேர்ச்சி பெற்றேன் என்றால் சரிதான். திருமணத்திற்கு பின்புதான் தொலை தூர கல்வி B.A. தமிழ் பயின்றேன் என்றால் சரிதான். ஒவ்வொரு வாரமும் மேற்படி படிப்பிற்கு அரச்சலூர் நவரசம் கல்லூரியில் வகுப்பு எடுப்பார்கள் என்றால் இல்லை. திருமணத்திற்கு பின்புதான் மனுதாரர் செலவு செய்து என்னை +2 மற்றும் இளநிலை கல்வி படிக்க வைத்தார் என்றால் இல்லை. நிச்சயதார்த்தத்தின்போது மனுதாரர் சார்பில் 2 ½ பவுன் நெக்லஸ் போட்டார்களா என்றால் போட்டார்கள். எனது முதல் விசாரணையில் மனுதாரரின் தாயார் பேச்சை கேட்டுக்கொண்டு ரூ.3,00,000/– வரதட்சணை கேட்டதாக கூறியுள்ளேன், எப்போது எதற்காக கேட்டார் என்று நான் பிரமாண வாக்குமூலத்தில் கூறவில்லை என்றால் சரிதான். பவுன் குறைவாக போட்டதால் என் மகனுக்கு 2 வயது இருக்கும்போது கேட்டார்கள். மேற்படி சங்கதியை எனது பதில் அறிவிப்பிலும், பதில் வழக்குரையிலும் நான் குறிப்பிடவில்லை என்றால் இல்லை, வரதட்சணை கேட்டதாக கூறியுள்ளேன். இவ்வாறு ஒரு சம்பவமே நடைபெறாததால்தான் நான் எனது பதில் அறிவிப்பிலும், பதில் வழக்குரையிலும் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. மனுதாரர் என்னிடம் ரூ.3,00,000/– வரதட்சணை கேட்டதால் என் அப்பா மேற்படி தொகையை வட்டிக்கு வாங்கி கொடுத்ததாக குறிப்பிட்டுள்ளேன். யாரிடம், எவ்வளவு வட்டிக்கு வாங்கி கொடுத்தார் என்று குறிப்பிடவில்லை என்றால் சரிதான். என் அப்பா அவ்வாறு வட்டிக்கு வாங்கி கொடுக்காததால்தான் என்னால் மேற்படி விவரங்களை குறிப்பிட இயலவில்லை என்றால் சரியல்ல. எனது முதல் மகனை நான் கருவுற்றபோது ஈரோடு சங்கீதா குமாரசாமி மருத்துவமனைக்கு மனுதாரர், நான் மற்றும் எனது தந்தை ஆகியோர்கள் முதல் பரிசோதனைக்கு சென்றோமா என்றால் இல்லை. மனுதாரர் வரவில்லை. மேற்படி மருத்துவ பரிசோதனை மற்றும் தொடர் மருத்துவ பரிசோதனைகளின்போது மனுதாரர் என்னுடன்தான் வந்தார் என்றால் இல்லை. நான் கருவுற்றிருந்தபோது குழந்தை வேண்டாம் என்று கருவை கலைப்பதற்கு மருத்துவமனைக்கு அழைத்து சென்றார் என்று குறிப்பிட்டுள்ளேன். எந்த மருத்துவமனைக்கு எப்போது அழைத்து சென்றார் என்று குறிப்பிடவில்லை என்றால் சங்கீதா குமாராசாமி மருத்துவமனை என்று குறிப்பிட்டுள்ளேன். 5ஆண்டுகள் மனுதாரருடன் நான் நன்றாக வாழ்ந்தேன் என்று கூறியுள்ள நிலையில் கருக்கலைப்பு செய்ய வேண்டும் என்று மனுதாரர் கூறியிருக்க இயலாது என்றால் மனுதாரர் அவ்வாறு கூறவில்லை. மனுதாரரின் அம்மா குழந்தை பிறந்தால் ஜாதகப்படி வீட்டிற்கு ஆகாது என்று கூறியதன் அடிப்படையில்



P SRIDEVI Digitally signed by P SRIDEVI Date: 2025.08.19 17:52:32 +0200

## Copy of Deposition

மனுதாரர் அவ்வாறு கூறினார். மேற்படி சங்கதியை நான் எனது பதில் அறிவிப்பிலும், எதிர் வழக்குரையிலும் கூறவில்லை என்றால் சரியல்ல. எனது இரண்டு குழந்தைகளையும் நான் கருவுற்றிருந்தபோது மனுதாரரோ அவரது தாயாரோ ஒருபோதும் கருக்கலைப்பு செய்ய வற்புறுத்தவில்லை என்று சொன்னால் சரியல்ல, சொல்லியுள்ளார்கள். முதல் குழந்தை பிறந்த போது அவரை ஆதவ் பள்ளியில் மனுதாரர்தான் சேர்த்தார் என்றால் இல்லை. அவருக்கு நேரமில்லை என்று சொன்னதால் நான்தான் சேர்த்தேன். ஆதவ் பள்ளியில் எந்த தொகை செலுத்தினாலும் இரசீது தருவார்கள் என்றால் சரிதான். இந்த மனுவில் இடைக்கால ஜீவனாம்சம் கோரி நான் ஒரு மனுதாக்கல் செய்தேன் என்றால் சரிதான். ஆதவ் பள்ளியில் மனுதாரர் பணம் செலுத்தியதற்கு மேற்படி மனுவில் அசல் இரசீதுகளை தாக்கல் செய்துள்ளார் என்றால் இல்லை. PKP பள்ளியில் பணம் செலுத்தியதற்கான இரசீதுகள் தாக்கல் செய்துள்ளார்.

**மனுதாரரின் வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.**

| |
|---|
| Taken down me in Open Court read over to the witness and acknowledge by |
| Interpreted<br>Him / Her To Be Correct<br><br>P SRIDEVI — Digitally signed by P SRIDEVI Date: 2025.08.19 17:52:41 +0200<br><br>Subordinate Judge,<br>Kodumudi |